திருவள்ளுவர் ஆண்டு 2040

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 103 பகுதி : 3 | மார்ச் - 09 | விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு



# காந்தியார் தந்த பதிலடி

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

வெள்ளையர்கள் நமைஅடிமை செய்த நேரம்
விடியலுக்காய்ச் சுழன்றுவந்தார் காந்திஅண்ணல்!
வெள்ளையுள்ள அச்செம்மல் அன்றைக் கோர்நாள்
விரைவுதொடர் வண்டியிலே பயணம் செய்தார்;
உள்ளமெலாம் கள்ளமதைத் தேக்கி வைத்த
ஒரு வெள்ளைக் காரன்எதிர் அமர்ந்து சென்றான்!
மெள்ள அவன் காந்தியிடம் எள்ளலோடு,
விடைவேண்டும் ஒரு புதிருக் கென்றேகேட்டான்!
எது தங்கள் புதிர் என்றார் காந்தி யாரும்.
எங்கள்ஐ ரோப்பியர்கள் உலகமெல்லாம்
அதிவெள்ளை வண்ணத்தில் உள்ளோம்! ஆனால்
அகிலஇந்தி யாமுழுதும் சுற்றிப் பார்த்தேன்;
புதிராகப் பலநிறத்தில் மக்கள் உள்ளார்!
பொதுவாக இந்தியர்கள் என்றழைத்தல்
மதியுடைய செயல்தானா? என்றான்; அன்னோன்
மமதைக்குப் பதிலடியைத் தந்தார் அண்ணல்!
பாருங்கள்! குதிரைகளோ உலக மெல்லாம்
பலவண்ண எழில்நிறத்தில் அழகாய்த் தோன்றும்!
சீரில்லாக் கழுதைகளோ கோள மெங்கும்
தீச்சாம்பல் ஒரேநிறத்தில் மங்கிக் காணும்!
பாரபட்சப் படைப்பிடத்தில் இப்பு திர்க்குப்
பதிலறிய வேண்டும் நீர் என்றார் காந்தி!
மாரியையே காணாத ஏரி மீன்போல்
மனமொடிந்த வெள்ளையனோ தலைகு னிந்தான்!

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 103
பகுதி : 3
மார்ச் 2009

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2040




| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

இதழ்மணம் 3

வஞ்சினக் காஞ்சி 4
பெரும்புலவர், மதுரைத்தமிழ்ச் சங்கச் சான்றோர்
இரா. இளங்குமரன்

சங்க இலக்கியங்களில் சொற்கள் காட்டும் தொன்மை 9
(சென்ற இதழ்த் தொடர்ச்சி) இராம.இருகப்பிள்ளை

ஒரு குறள் படும்பாடு- II 16
பெரும்புலவர் ப.அரங்கசாமி

குடும்ப விளக்கு, குடும்ப விளக்கும் 21
குண்டுக்கல்லும் – வேற்றுமைப் பண்புகள்
முனைவர் இ.கி.இராமசாமி

பாவேந்தர் போற்றும் திருக்குறள் 29
முனைவர் பா.வளன் அரசு

ஒரு துறையும் பல்லோர் பாடலும் முனைவர் கி. இராசா 35

# இதழ்மணம்

தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் வணக்கம். செம்மொழித் தமிழின் சிறப்புகளை எடுத்துக்காட்டும் சிறந்த கட்டுரைகள் அமையப்பெற்றுள்ள இம்மாதத்தின் இதழ் (மார்ச், 2009), நம் மதுரைத் தமிழ்ச்சங்கச் சான்றோர் விருதுபெற்ற பெரும்புலவர் இரா.இளங்குமரன் அவர்களின் 'வஞ்சினக்காஞ்சி' என்னும் கட்டுரையுடன் தொடங்குகின்றது.

சங்ககால மன்னர்களின் பண்புநலனை வெளிக்காட்டும் வஞ்சினக்காஞ்சித் துறைப்பாடல்களின் வாயிலாக, இக்கால மக்களின் பண்புநலன் மாறியுள்ளதை நுட்பமாகச் சுட்டியுள்ள பாங்கு படித்து இன்புறத் தக்கதாகத் திகழ்கிறது.

உலக இலக்கியங்களுள் சிறந்த இலக்கியங்களாகச் சுட்டும் பெருமை வாய்ந்த சங்க இலக்கியங்களில் பயிலப்பெற்றுள்ள சொற்களுள் உலகு, உடம்பு, அறிவு ஆகியவற்றைக் குறிக்கும் சொற்கள் பல உள்ளதை எடுத்துக்காட்டி, அவற்றிற்கு இடையேயுள்ள நுட்பமான பொருள்களையும் விளக்கிக் காட்டும் வண்ணமாக "சங்க இலக்கியங்களில் சொற்கள் காட்டும் தொன்மை" என்னும் கட்டுரை அமைந்து தமிழின் சிறப்பை நினைவுகூரச் செய்கின்றது.

நுவல்தோறும் நுவல்தோறும் புதுப்புது பொருண்மை காட்டுவது தமிழ் இலக்கியச் சிறப்பு. அதனடிப்படையில் ஒரு குறளுக்குப் பல உரைகாரர்கள் விளக்கியுள்ள பாங்கினைப் பெரும்புலவர் ப.அரங்கசாமி தொடர்ந்து எழுதி வருகிறார். பாராட்டுக்கள்.

பாவேந்தர் பாரதிதாசனிடம் அமையப்பெற்றுள்ள பெண்மையைப் போற்றும் படிவளர்ச்சி நிலையினைக் காட்டுவதாக முனைவர் இ.சி.இராமசாமியின் கட்டுரை அமைந்துள்ளது.

எல்லாக் காலத்துக் கவிஞர்களாலும் போற்றிப் புகழப்படும் செம்மையுடையது திருக்குறள். வாழ்வின் வழிகாட்டியாகத் திருக்குறள் திகழும் பாங்கினை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்த பாரதிதாசனாரின் பாடல்களை ஆராயும் கட்டுரை "பாவேந்தர் போற்றும் திருக்குறள்" ஆகும்.

ஒவ்வொரு படைப்பாளர்களின் முழு படைப்புகளை ஆராய்வதைவிட ஒரு பொருண்மை குறித்த பல படைப்பாளர்களின் படைப்புக்களை ஆராயும்போது புதிய செய்திகள் கிடைக்கப்பெறும் என்ற ஆய்வுண்மையை வெளிக்காட்டுவதாக 'ஒரு துறையும் பல்லோர் பாடலும்' என்ற கட்டுரை அமைந்துள்ளது.

செம்மொழித் தமிழை நுணுகி ஆராய்ந்து நுட்பமான பல உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ள இதழாக இவ்விதழ் அமைந்துள்ளது. நீடு நினைந்து இன்புறத்தக்கதாகும்.

– முனைவர் க.சின்னப்பா

# வஞ்சினக் காஞ்சி

பெரும்புலவர், மதுரைத்தமிழ்ச் சங்கச் சான்றோர் -
இரா. இளங்குமரன்

காஞ்சித் திணையுள் வரும் ஒரு துறை வஞ்சினக் காஞ்சி. இதன் இலக்கணத்தைத் தொல்காப்பியம்,

*"இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத்*
*துன்னரும் சிறப்பின் வஞ்சினம்"*

என்கிறது. இன்னவாறு செய்தலைப் பிழைத்தேனாயின் இன்னேன் ஆகக் கடவேன் எனக் கூறிய துன்னற்கு அரிய வஞ்சினக் காஞ்சியும் என உரை கூறும் இளம்பூரணர், நகுதக்கனரே நாடுமீக் கூறுநர் என்னும் புறப்பாடலை எடுத்துக்காட்டுகிறார்.

இத்தன்மை தொன்றனைச் செய்தல் ஆற்றேனாயின் இன்னவாறாகக் கடவேன் எனக் கூறிய வஞ்சினக் காஞ்சி என உரைகூறும் நச்சினார்க்கினியர்,

*"மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி"*

என்னும் புறப்பாடலை எடுத்துக்காட்டுகிறார் (73). அன்றியும் நகுதக்கனரே நாடுமீக் கூறுநர், 'மடங்கலில் சினைஇய' (72,71) என்னும் புறப்பாடல்களையும் சுட்டிக் காட்டி இப்புறப்பாட்டுகள் உயிரும் செல்வமும் போல்வன நிலையும் பொருளென நினையாது வஞ்சினம் செய்தன என்கிறார்.

புறநானூற்றில் வரும் வஞ்சினப்பாடல்கள் மூன்றும் (71–73) உரையாசிரியர்களாலும் ஏற்றுப் போற்றப் பெற்றனவாம்.

புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சினக் காஞ்சி இலக்கணத்தை,

*"வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப*
*வஞ்சினம் கூறிய பகைமொழிந் தன்று"*

என்று கூறுகிறது (4:19).

*“ இன்று பகலோன் இறவாமுன் ஒன்னாரை*
*வென்று களங்கொள்ளா வேல் உயர்ப்பின் - என்றும்*
*அரணவியப் பாயும் அடையார்முன் நிற்பேன்*
*முரணவிய முன்முன் மொழிந்து”*

எனச் சான்று காட்டுகின்றது.

*“ இன்று ஞாயிறு படுமுன் என்பகைவரை அழிப்பேன் இன்றேல் அவர்க்கு அடிமை புகுவேன் என்றது இவ்வெண்பா”.*

புறநானூற்றில் இடம் பெற்றுள்ள முதல் வஞ்சினப் பாடலைப் பாடியவன் ஒல்லையூர் தந்த பூத பாண்டியன் என்பான். அவனேயன்றி, அவன் ஆருயிர்த்துணைவியாரும் மதுரைப் பேராலவாயாரால் பாடுபுகழ் பெற்ற வீறுடையார், அவரும் பாடல் வல்லார். நீரும் தீயும் எமக்கு ஒரு தன்மையே என்று கணவனோடு தீப்பாய்ந்து புகழுற்றவர் (246).

பூத பாண்டியன் பெயரால் நெல்லை நாட்டில் பூதபாண்டி என்றோர் ஊரே உண்டு அவ்வூரில் பிறந்த பெருமையரே தோழர் சீவானந்தம்.

பூத பாண்டியன் எத்தகு மேம்பட்ட வாழ்வினனாக விளங்கினான் என்பதைக் காட்டுவது அவன் கூறிய வஞ்சினம்.

என்னோடு பகைத்து வந்த வேந்தர்களை வென்று அவர்கள் புறங்காட்டி ஓடக்காண்பேன், அவ்வாறு காணேன் எனின், என் இனிய மனைவியைப் பிரிவேனாக; அறமன்றத்தில் தக்கோன் அல்லான் ஒருவனாக அமர்த்திய அறக்கேடன் ஆவேனாக.

மையல் ஊர் மாவன் என்பானும், எயில் ஊர் ஆந்தை என்பானும், அந்துவஞ்சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் என்பாரும் பிறருமாகிய என் கண்போல் நண்பர்களுடன் கலந்துறையும் மகிழ்வை இழந்தேன் ஆக; காவற் கடன் பூண்ட சிறந்த அரசர் குடியில் பிறந்த பிறப்பு மாறிப் பிறர்க்குரிய பாழ்நிலம் காக்கும் வறிய குடியில் பிறப்பேனாக என வஞ்சினம் மொழிகின்றான். அவன் பாடிய பாடல் பட்டை தீட்டப்பட்ட வயிரமன்ன சொற்களைத் தாங்கிப் புறநானூற்றுப் பேழையில் இன்றும் பொலிவான முகம் காட்டிக் கொண்டுள்ளது.

"மடங்கலின் சினைஇ மடங்கா உள்ளத்து
அடங்காத் தானை வேந்தர் உடங்கியைந்து
என்னொடும் பொருதும் என்ப; அவரை
ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர்ப்புறம் காணேன்ஆயின் சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக
அறநிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக; மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பின்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனும், மன்எயில் ஆந்தையும், உரைசால்
அந்துவஞ் சாத்தனும், ஆதன் அழிசியும்
வெஞ்சின இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பின் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை இழுக்கியான் ஒன்றோ,
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலம் காவல் ஒரீஇப் பிறர்
வன் புலம் காவலின் மாறியான் பிறக்கே"

என்பது அப்பாட்டு.

அடுத்த வஞ்சினப்பாட்டைப் பாடியவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பான்.

என்னைச் செருக்கொடும் எதிரிட்டு வந்தாரைத் தாக்கி அவர் முரசு முதலியவற்றைக் கொள்ளேன் என்றால், என் குடைநிழலில் வாழும் என் இனிய குடிமக்கள் சென்று நிற்கும் நிழலைக் காணாராய் எம்வேந்தன் கொடியன் என்று கண்ணீர் பெருக்கிக் குடிக்குப் பழியாக்கும் கொடுங்கோலேன் ஆவேனாக. உயர்ந்த சிறப்பும் நிறைந்த புலமையுமுடைய மாங்குடிமருதன் தலைவனாக அமைந்த புலவர் என் நாட்டைப் பாடாது நீங்குவாராக. காப்பவரும் வறியராய் இரப்பவர்க்கும் உதவ முடியாத வறுமையை யான் அடைவேனாக என்கிறான்.

வஞ்சினக் காஞ்சியுரை வாழ்வின் குறிக்கோள் உரை என்பது தெளிவாகும் நெடுஞ்செழியன் பாட்டு,

*“நகுதக்கனரே நாடுமீக் கூறுநர்*
*இளையன் இவனென உளையக் கூறிப்*
*படுமணி இரட்டும் பாஅடிப் பணைத்தாள்*
*நெடுநல் யானையும் தேரும் மாவும்*
*படையமைமறவரும் உடையம் யாமென்று*
*உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச்*
*சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை*
*அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு*
*ஒருங்ககப் படேஎன் ஆயின் பொருந்திய*
*என் நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது*
*கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்*
*குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக*
*ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி*
*மாங்குடி மருதன் தலைவனாக*
*உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்*
*புலவர்பாடாது வரைக என் நிலவரை*
*புரப்போர் புன்கண் கூர*
*இரப்போர்க் கீயா இன்மையான் உறவே”* புறநானூறு 72

சோழன் நலங்கிள்ளி பாடிய வஞ்சினக் காஞ்சிப்பாட்டு புறநானூற்றின் 73ஆம் பாடலாக இடம் பெறுகின்றது.

இரந்து வந்து ஈக என்று கேட்டால் அரசையும் அளிப்பேன் என்பது மட்டுமில்லை உயிரையுமே தருவேன். என்னை இகழ்ந்து வந்து எதிரே நிற்பவன் எவன் எனினும் உறங்கும் புலிமேல் விழுந்த பார்வை இல்லாதவன் போல அழிந்து படாது போகான். யானையின் காலடி மூங்கில் முளைபோல் சதைக்காவிட்டால் காதலற்ற பொருட்பெண்டிர் மயக்கத்தில் என் மார்பின் மாலை பட்டு வாடித் தொலைவதாக என்கிறான். அவன் பாடிய பாட்டு,

*“மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி*
*ஈஎன இரக்குவர் ஆயின் சீருடை*
*முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்*
*இன்னுயிர் ஆயினும் கொடுக்குவென் இந்நிலத்து*
*ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாதென்*
*உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்*
*துஞ்சுபுலி இடறிய சிதடன் போல*
*உய்ந்தனன் பெயர்தலோ அரிதே மைந்துடைக்*
*கழைதின் யானைக் காலகப் பட்ட*
*வன்திணி நீண்முளை போலச் சென்றவண்*
*வருந்தப் பொரேஎன் ஆயின், பொருந்திய*
*தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்*
*பல்லிருங் கூந்தல் மகளிர்*
*ஒல்லா மயக்கிடைக் குழைகஎன் தாரே”*

மூவர் கூற்றும் வஞ்சினமே எனினும் ஒவ்வொருவர் எண்ணத்தையும் வாழ்வின் வண்ணத்தையும் திண்ணமுறக் காட்டுதல் காண்போர், வஞ்சினம் அக. புற வாழ்வுப் பார்வைக்கு விருந்தாதலும் விரிந்த வரலாறாகத் திகழ்தலும் விளங்கும்.

இன்றும் வஞ்சினம் மக்கள் வாழ்வில் இல்லாமல் போகிவிடவில்லையே! மீசை இருப்பவன் உன்னிடம் தோற்றால் மீசையை எடுத்துவிடுகிறேன் என்கிறான் ஒரு பக்கத்து மீசையை எடுத்து விடுகிறேன் என்றான். மீசை இல்லாதவன் இப்படிச் சொல்ல முடியுமா?

“சட்டி எடுத்தாலும் எடுப்பேனே ஒழிய உன்னிடம் கேட்டு வரமாட்டேன்” என்கிறான். என்பேரை மாற்றிக் கூப்பிடு என்கிறான்

வாழ்வியல் சரிவைச் சாற்றவில்லையா இவை?

# சங்க இலக்கியங்களில் சொற்கள் காட்டும் தொன்மை

சென்ற இதழ்த் தொடர்ச்சி...

— இராம.இருகப்பிள்ளை

சங்க இலக்கியங்களில் உலகைக் குறிக்க பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் ஏன்? அவையெல்லாம் காரணப் பெயர்கள். அவை பற்றி உலகில் பிற பகுதியார் அறியாதிருந்த காலத்திலேயே தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்திருந்தது என்பதனை எண்ணும் போது அவை அவர்களின் அறிவியல் அறிவையும் ஆன்ம இயல் உணர்வையும் எண்ணி எண்ணி வியக்கத்தக்கனவாக உள்ளன.

உலகம், படி, பார், நிலம், ஞாலம், மண் என்பன போன்ற சொற்கள் இந்நில உலகைக் குறிக்க சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன.

**உலகம்**

உலகம் அசையாது நிற்பது என்று எண்ணப்பட்ட காலத்தில் உலகம் உலவுவது என்ற உண்மையை உணர்ந்தவர்கள் உலகம் என்றனர். உலவுவதாலேயே உலகம் ஆயிற்று. உலவை, உலமருதல் என்பன உலவுதல், சுழலுதல் ஆகிய பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே உலகம் சுழன்றும் சுற்றியும் வரும் செயற்பாடுகளை உள்ளடக்கியே உலகம் என்றனர்.

"நிலம், நீர், வளி, விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்" (தொ.பொ.மரபு–9) இவ்வுலகத்தைப் பற்றிய பல குறிப்புகள் இலக்கியங்களில் உள்ளன.

* வலன் ஏர்பு திரிதரு உலகம் உவப்ப பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டாங்கு (திருமுருகா 1,2)
* உலவுத்திரை (நற்.31)
* உலவும் மதி (புறம்.2)

* ஒரு பகல் வாழ்க்கைக்கும் உலமருவோரே (புறம்.5)
* வாயாவன்கனிக்கு உலமருவோரே (புறம்.207)
* வளி பெரு நெடும் கிளை அலங்கை உலவை (குறு.79)
* மலர்தலை உலகத்துமரபு (தொ.பொ.புறத்.9)
* நில்லா உலகத்து நில்லுதல் குறித்தோர் (புறம்)

**படி**

படி என்பது படிதலினால் அமைந்ததோர் காரணப் பெயர். அதாவது வான் படிந்து வளியாகி, வளி படிந்து, வெப்பமாகி, வெப்பம் படிந்து தண்ணீராகி, தண்ணீர் படிந்து மண்ணாயிற்று. இப்படிப் படிந்து படிந்துதான் திண்மை பெற்று நிலவுலகமாய் உள்ளதை 'படி' என்றே அழைத்தனர்.

"கள்ளுண்ணும் படிமிடறு என்கோ" (பாடல் 6–29) ஈண்டுப்படி என்ற சொல் நிலமகளைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. படி செய் பிரமன் முதலோர்" (அருட்பா 3985) படி என்ற சொல் மண்ணுலகைக் குறிக்கும் என்பதனைப் பிற்கால நிகண்டுகளாலும் அறிகின்றோம்.

**பார்**

உலகைக் குறிக்க பார் என்ற சொல்லும் உண்டு. இதுவும் காரணப் பெயரே. செறிவுமிக்க மண்ணினைப் பார் என்பர். நாட்டுப்புறங்களில் கிணறு வெட்டுகின்ற போது கடினமான நிலப்பரப்பு வரும்வரை தோண்டி மண் சரிந்து கிணற்றுக்குள்ளே விழாமல் தடுக்க உட்சுற்றுச் சுவரை அந்த எல்லையில் – பார்மீது கட்டுவர். பின்னர் கிணற்றை ஆழமாகத் தோண்டுவர். ஏனைய பூதங்களின் செறிவைக் காட்டிலும் மண்ணின் செறிவு அதிகம். எனவே மண்ணின் தன்மை நோக்கிப் பார் என்றனர். அதுவே அதனாலான உலகிற்கு ஆகி வந்துள்ளது.

* பார் உடைத்த குண்டகழி (புறம் – 7)
* பார் தாக்கப் பக்குவிடு (குறள்–106)
* பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பானே (திருவாசகம்)

## நிலம்

நிலம் என்ற சொல் உலகைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நிலம் என்ற சொல் நில் என்ற வேர்ச் சொல்லடியாகப் பிறந்த பெயர்ச்சொல். உயிரினங்கள் நிற்பதற்கு இடமாக உள்ளது இந்த உலகம். ஆதலால் இதனை நிலம் என்றனர்.

* செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி (தொ.எச்ச–2)

* இரு நிலத்தன்ன நோன்மை (புறம் – 14)

* உள்ளுறை, தெய்வம் ஒழிந்ததை நிலம் எனக் கொள்ளும் என்பர். (தொ.பொ.அக.50)

சங்க இலக்கியங்களில் இம் மண்ணுலகை நிலம் என்றே பல இடங்களில் குறிப்பிட்டுள்ளனர். பிற உலகங்களில் இருந்து பிரிப்பதற்காகவும் உயிரினங்கள் நிற்பதற்கு இடமாக உள்ளது கருதியும் நிலவுலகு என்றனர்.

## வையம், வையகம்

வையம், வையகம் என்பன மண்ணுலகைக் குறிக்கும் வேறு இரு சொற்களாகும். இவற்றுள் வையகம் என்ற சொல்லே வையம் ஆயிற்று. வை+அகம் என்ற இரண்டு சொற்கள் சேர்ந்ததே வையகம். பிரபஞ்சப் பரிணாமத்தில் மண் எனும் பூதம் இறுதியானது. ஏனைய நான்கு பூதங்களின் வைப்பும் மண் எனும் பூதத்தில் உள்ளன. இவ்வைந்து பூதங்களின் மயக்கத்தால் ஏற்படும் எல்லாப் பொருள்களும் இம் மண்ணுலகில் வைப்பாக உள்ளன. எனவே இது வையகம் எனப்பட்டது. அண்டத்தில் உள்ளன எல்லாம் பிண்டத்தில் என்ற ஒரு முதுமொழி உண்டு. அதாவது அண்ட கோளத்தில் அடங்கியுள்ள எல்லாமும் பிண்டமாகிய நிலவுலகில் உள்ளன என்பதே இதன் பொருள். எல்லாப் பொருள்களையும் வைப்பதற்கு இடமாக நிலவுலகம் உள்ளதால் இதனை வையகம் என்றனர்.

## மண்

மண் என்ற சொல் நிலவுலகைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றொரு சொல்லாகும்.

'மண்' என்றால் 'கழுவு' என்று பொருள்படும். 'மண்ணான்' என்பதே வண்ணான் ஆயிற்று. வண்ணான் தொழில் ஆடைகளில் உள்ள அழுக்கைப் போக்குவது. மண்ணுலகின் சிறப்பு ஆன்மாக்களில் வந்தேறும் மலங்களை அதாவது அழுக்குகளைக் கழுவுவது. ஐம்பூதங்களின் மயக்கம் இவ்வுலகம் என்றதனால் உலகப் பிரபஞ்சமும் உயிர்ப் பிரபஞ்சமும் ஐம்பூதச் சேர்க்கையால் தோன்றியுள்ளன. இவ்வுயிர்ப் பிரபஞ்சம் உலவி உலவி பல அழுக்குகளை ஏற்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. இவ்வழுக்குகளைக் கழுவிக் கழுவித் தன் ஆதி நிலையாம் அருள்நிலையை, தூய நிலையை எய்துதற்கு உரிய இடம் இம்மண்ணுலகமே. எனவேதான் வானுலகத்தவரும் இம்மணுலகில் பிறக்க அவாவி நிற்கின்றனர்.

* *மண்ணுறு மணியின் மாசு அற மண்ணிய (புறம் 147)*
* *மாசறு மண்ணுற்ற மணிபோலும் இரும் கூந்தல் (கலி. 77-44)*

**ஞாலம்**

'ஞால்' என்றால் தொங்கு என்று பொருள். ஞாலம் என்றால் தொங்குவது எனப் பொருள். ஞாலம் என்பது இம்மண்ணுலகைக் குறிக்கும் மற்றும் ஒரு சொல். இம்மண்ணுலகம் அந்தரத்தில் தொங்கிக் கொண்டுள்ளது என்ற உண்மையை உணர்த்தவே ஞாலம் என்ற பெயரால் மண்ணுலகை அழைத்தனர்.

* *ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்காலம்*
  *மூன்றொடுகண்ணிய வருமே (தொ.பொ.புறத். 88)*
* *புரந்துபட்ட வியன்ஞாலம் (புறம் .18)*
* *ஞாலத்தின் மாணப் பெரிது (குறள்)*
* *மண் தலை ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்*
  *உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (மணிமே .11-95)*

மண் உலகம் சுற்றியும் சுழன்றும் வருவது, ஒன்றின்மீது ஒன்றுபடிந்து படிந்து வந்தது; செறிவு மிக்கது; எல்லாப் பொருட்கும் இடமானது; தொங்கிக் கொண்டு இருப்பது; உயிர்கள் நிற்க இடமாக இருப்பது; உயிர்களின் மீது வந்தேறிய அழுக்குகளைக் கழுவும் இடமாக இருப்பது என்பன போன்ற அறிவியல் மற்றும் ஆன்ம இயல்

உண்மைகளை 3000 ஆண்டுகட்கு முன்பே உலகின் பல பாகத்தவர்கள் இவ்வுண்மைகளை அறியா முன்பே தெளிவாகத் தெரிந்து பயன்படுத்தியுள்ளனர். அவர்களின் அறிவு மற்றும் ஆன்மத் தெளிவின் தொன்மம் எண்ணி இறும்பூது எய்துதற்கு உரியது.

**உடல்**

சங்க இலக்கியங்களில் உடம்பைக் குறிக்க உடல், யாக்கை, மெய், மேனி என்பன போன்ற பல சொற்கள் கையாளப்பட்டுள்ளன. இவை தரும் பொருள்களை எண்ணிப் பார்த்தால் அவர்கள் எந்த அளவு அறிவியல் உண்மைகளைத் தெளிவாகத் தெரிந்துள்ளனர் என வியக்க வேண்டியுள்ளது.

உடலுதலால் அது உடல் எனப்பட்டது. உடலுதல் என்றால் மாறுபடுதல் என்று பொருள். விநாடி கால எல்லைக்குள் மனித உடலில் இருந்து பல்லாயிரக்கணக்கான அணுக்கள் வெளியேறியும் பல்லாயிரக்கணக்கான அணுக்கள் வந்து சேர்ந்தும் ஒவ்வொரு நொடிக் கூறிலும் மனிதனின் உடல் மாறுபட்டுக் கொண்டே உள்ளது என்பது அறிவியல் உண்மை. இந்த உண்மையை உணர்த்துவதாக உடல் என்ற சொல் பயன்பட்டு வருகிறது.

"ஓடா உடல் வேந்து" (தொ.பொ.புறத். 5)
"அம்புசேர் உடம்பினர்ச் சேர்ந்தோர் அல்லது" (பதிற்.ப42)

**மகா ஆகாசம்**

செறிவற்றுப் பிரிந்து எல்லை கட்டும் நிலையில் அருவான ஆகாசம் என்கின்றனர்; வான்வெளி என்கின்றனர்; பூதாகாரம் எனப் புகழ்கின்றனர்.

**யாக்கை**

'யாக்கை' என்பதற்குக் கட்டப்பட்டது என்று பொருள். இந்த உடம்பு ஏழு தாதுக்களால் கட்டப்பட்ட ஒரு குரம்பை. இந்த உண்மையை உணர்ந்தே அவர்கள் யாக்கை என உடம்பினைக் குறிப்பிட்டுள்ளனர்.

"சென்ற உயிரின் நின்ற யாக்கை" (தொ.பொ.புறத் 13)
"என்பெழுந்து இயங்கிய யாக்கையர்" (திருமுருகு)

**மெய்**

'மெய்' என்றால் உண்மை என்று பொருள். உண்மை என்றும் அழியாதது. ஆனால் இந்த உடம்போ நொடிக்கு நொடி மாறுவதோடு ஒரு நாள் இல்லாமலே போய்விடுகிறது. அதற்கு உண்மை என்ற பொருளுடைய சொல்லாகிய 'மெய்' என்று பெயரிட்டனர்.

"விரும்பும் மெய் பரந்த பெரும்பெயர் ஆகுதி" (பதிற்.21)
"அணங்கு மெய்ந் நின்ற" (பொருநர்.20)
"மெய்யாப் பூவின் மெய் சாயினளே" (குறுந்.9)
"மெய்ப் பை புக்க வெருவரும் தோற்றம்" (முல்லை.61)

**மேனி**

உடம்பைக் குறிக்கும் இன்னொரு சொல் மேனி என்பது. மேனி என்ற சொல் மேல்+நி என்று பாகுபடும். இந்த உடம்பு மேலானதா, ஒரு நாள் குளிக்கவில்லை என்றால் நாற்றத்தை எழுப்பக்கூடியது. ஆனாலும் பழந்தமிழர்கள் இதனை ஏன் மேனி என்றனர். இந்த உடம்பில் உள்ள உயிர் ஒன்றினால்தான் பிரபஞ்சத்தில் உள்ள பிறவற்றை மாற்றிப் பயன் கொள்ள முடியும்; என் உள்ளம் யார்? ஞானங்கள் எவை? என்பன போன்றவற்றிற்கு விடை தேடி உணர முடியும். இந்த மேலான ஆற்றலை இவ்வுடம்பு பெற்றுள்ளதால் இதனை மேனி என்றனர்.

*"ஆரந்தாங் நிரம்பா மேனி" (குறுந்.33)*
*"நல் மா மேனி" (பெரும்.160)*
*"எழில் மேனி கவின் வாட" (கலி.13)*

இப்படிக் காரணம் உணர்ந்து தெளிந்து காரணத்தை உணர்த்தும் சொற்களைப் பெயர்களாக வைத்த தமிழ்ப் பெருமக்களின் தொன்மத்தை எண்ணி மகிழ வேண்டியுள்ளது. இத்தகு பொருள் பொதிந்த சொற்களைக் கொண்ட இலக்கியங்கள் இலங்கும் தமிழ்மொழி செம்மொழி.

**அறிவு-ஞானம்**

தமிழில் அறிவு, ஞானம் என்ற சொற்கள் உள்ளன. அறிவு எதனையும் பகுத்துப் பார்ப்பது. ஞானம் என்பது தொகுத்து உணர்வது. 'ஞானம் என்ற சொல் இப்போது கிடைத்துள்ள சங்க இலக்கியங்களில் பயிலப்படாதது ஒன்று கருதியே ஞானம் தமிழ்ச்சொல் அன்று எனக் கூற முடியாது. காரணம் என்னவென்றால் நான் பற்றிய அறிவே ஞானம் ஆகும். தன்னை அறியும் அறிவே ஞானம். எனவே நான் என்ற பொருள் 'ஞான்' என்ற தமிழ்ச்சொல்லுக்கு உண்டு. மேலும் வடமொழியில்தான் இந்த ஞானம் உண்டு என்பார் உண்டு. ஞானத்தின் வேர்ச் சொல்லால் ஆன அறிவு என்ற பொருளைத் தரும் சொல் ஹீப்ரு, லத்தீன், கிரேக்கம், ஜெர்மனி போன்ற மொழிகளில் இல்லை என்கின்றனர். Gnosis என்ற சொல்லுக்கு அறிவு என்று பொருள். எனவே இந்தோ ஐரோப்பிய மொழிகளிடம் இது உள்ளது. எனவே இது வடமொழிக்கே உரிய சொல் என்பார் உண்டு. இச்சொல் ஆங்கில அகராதியில் மட்டும் உள்ளது. அது இங்கிருந்து அங்குச் சென்றிருக்கலாம். இதுபற்றி பன்மொழி வல்லுநர்கள் ஆழ்ந்து அறிவு நிலை நின்று முடிவு கூறுவார்களாக. மும்பை பாரதீய வித்யா பவன் வெளியிட்டு 11 பகுதிகளாக வெளியிட்டுள்ள இந்திய மக்களின் வரலாறும் பண்பாடும் என்ற நூலின் முதற்பகுதி வேதகாலம் என்பதாகும். அதில் இன்றைய இந்துப் பண்பாட்டுக் கூறுகளானது பெரும்பாலானவை திராவிடர்களுடையன என்று எழுதியுள்ளனர்.

ஆரியர்களின் இந்திய வருகை கி.மு.2000க்குப் பின்னர் என்றும் ரிக்வேத காலம் கி.மு.1000க்கு முன்பாக இருக்க இயலாது எனவும் இந்து சமவெளி நாகரிகம் கி.மு.3000க்கு முற்பட்டது எனவும் அந்நூலில் குறிப்பிட்டுள்ளனர்.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன' என்ற அடிப்படையில் தமிழ்ச் சொற்கள் தரும் பொருள் உணர்ந்தால் தமிழ்ப் பெருமக்களின் தொன்மம் மட்டும் அன்றி அவர்களின் அனுபவ ஞானமும், ஆராய்ச்சி அறிவின் தொன்மமும் துலங்கும். இங்கே சான்றுக்காகச் சில சொற்கள் மட்டும் எடுத்துக் காட்டப்பெற்றன. எல்லாச் சொற்களையும் கண்டால் உவகை பொங்கும்; உணர்வு ஓங்கும். வாழ்க வையகம்!

# ஒரு குறள் படும்பாடு – II

பெரும்புலவர் ப.அரங்கசாமி
தலைவர், தமிழகப் புலவர் குழு
லால்குடி–621 601

**இயல்புடைய மூவர் - யார்?**

திருக்குறள்

*இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றின் நின்ற துணை* (இல்வாழ்க்கை– 1)

இக்குறட்பா கூறும் 'மூவர்' யார் என்பதற்குப் பரிமேலழகர் முதல் இன்றைய உரைகாரர் வரை, ஆளுக்கொரு மூவரைக் கூறுகின்றனர். ஒன்றுக்கொன்று முரண்பட்ட உரை.

எடுத்துக்காட்டாகச் சிலர் உரைகள்,

**பரிமேலழகர்**

1. "மூவர் ஆவார். ஆசிரியனிடத்தின்றும் ஓதலும் விரதங்காத்தலும் ஆகிய பிரமசரிய ஒழுக்கத்தானும், வனத்தின்கண் தீயொடு சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய் ஒழுக்கத்தானும், முற்றத் துறந்த யோக ஒழுக்கத் தானும் என இவர்".

2. **மிகப் பழைய - (ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட) உரை**

"மூவராவார் ஆசிரியனிடத்தே ஓதுகின்றவனும் விரதங் காக்கின்றவனுமாகிய பிரமசாரியும், காட்டிடத்தே போய் மனையாளொடு தவஞ்செய்கின்றவனாகிய .வானப்பிரஸ்தனும், எல்லாப் பற்றுகளையும் விட்ட சன்னியாசியும்"

3. **மணக்குடவர்**

"தவத்தின்பாற்பட்ட விரதங்கொண்டு ஒழுகாநின்ற பிரமசாரிக்கும், தவமேற்கொண்டொழுகாநின்ற வானப்பிரத்தன், சந்நியாசிகளுக்கும் ஒரு துணை"

4. பரிதியார்

"*அயல்புடைய மூவராய பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி என்ற மூவர்க்கும் துணையாம்*"

5. காலிங்கர்

"பிரமசரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்கின்ற மரபினையுடைய மூவர்க்கு வழிபாட்டின் தன்னிலை நின்ற துணை என்றவாறு"

6. டாக்டர் மு.வரதராசனார்

"துறந்தவர்க்கும், வறியவர்க்கும், தன்னிடத்தே இறந்தவர்க்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கின்றவன் துணையாவான்"

7. பாவாணர்

திருவள்ளுவர் "பிரமசரியம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் முந்நிலைப்பட்ட பிராமணரைக் காத்தலைத் தமிழ் வேளாளன் கடமையெனக் கூறியிரார்"

8. சாமி சிதம்பரனார்

"இல்லறத்தில் வாழ்பவன் ஏனைய பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய மூவர்க்கும் உதவி செய்வான்"

9. முனைவர் சோ.சத்தியசீலன்

"துறவிகளுக்கும், ஏழைகளுக்கும், தம்மிடம் வந்து யாசிப்பவர்க்கும் துணை நிற்பான்"

10. முனைவர் அ.ஆறுமுகம்

"இல்லறத்தான் இயற்கைத் தொடர்பால் அமைந்த தந்தை, தாய், மனைவி ஆகிய மூவர்க்கும் நல்வழியில் நிலை பெற்ற துணை ஆவான்.

11. பேராசிரியர் மயிலை சிவமுத்து

"பெற்றோர், பிள்ளைகள், உடன்பிறந்தோர் ஆகிய மூவர்"

12. பேராசிரியர் அ.மாணிக்கம்

"கல்வி, மனத்துறவு, துறவு–அறநிலையிலுள்ள மூவர்க்கும் நல்ல ஒழுக்க நெறியில் உறுதியான துணையாவான்.

**13. முனைவர் க.ப.அறவாணன்**

"பெற்றோர், சுற்றம், நண்பன் ஆகிய மூவர்"

**14. அறிஞர், அப்பரடிப்பொடி ச.திருநாவுக்கரசு**

"இயல்பாகத் தொடர்புடைய தாய், தந்தை, ஆசான் ஆகிய மூவர்"

இவ்வாறு மூவர் என்பதற்கு முரண்பட்ட உரைகளைக் கண்டோம். எனவே,

மூவர் யாவர் என்று, இவ்வதிகாரத்துடன் தொடர்புடைய முறையில் ஆழ்ந்து பொருள் காணல் வேண்டும் அல்லவா!

**பொது நியதி**

ஒரு குறட்பா பலவாறு பொருள் கொள்ளுமாறு அமையின் தெளிவு பெறக் கீழ்க்காணும் நியதி மேற்கொள்ள வேண்டும்.

(அ) அக்குறட்பா இடம்பெற்ற அதிகாரத்தில் அடுத்தடுத்துள்ள குறட்பாக்களை ஆய்ந்து காண வேண்டும்.

(ஆ) ஆய்விற்குரிய குறட்பா இடம்பெற்ற அதிகாரத்தோடு தொடர்புடைய பிற அதிகாரங்களை ஆய்ந்தறிதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

கல்வி பற்றிய செய்தியாயின் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை அதிகாரங்கள்

நட்புபற்றியதாயின் நட்பு, நட்பு ஆராய்தல், பழமை, தீநட்பு, கூடாநட்பு முதலிய அதிகாரங்கள்.

வினை பற்றியதெனின் வினைசெயல்வகை, வினைத்திட்பம், வினைத்தூய்மை முதலிய அதிகாரங்கள்.

ஆராய்ந்து செய்வதாயின் தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் முதலிய அதிகாரங்கள்.

பெரியாரைப் பற்றியதாயின் பெரியாரைத் துணைகோடல், பெரியாரைப் பிழையாமை அதிகாரங்கள்.

இவ்வாறு ஒருபொருள் பற்றித் தெளிவுபெற வேண்டுமெனின் அப்பொருள் பற்றிய அதிகாரங்களை ஒருங்குகொண்டு அறியவேண்டும்.

இவ்வகையில், 'இயல்புடைய மூவர்' யாவர் என்றறிய இக்குறட்பாவை அடுத்துள்ள இரண்டாவது குறட்பாவான,

> ***துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்***
> ***இல்வாழ்வான் என்பான் துணை***

என்ற குறட்பாவைத் துணைகொண்டு பொருள் காணவேண்டும். துணை கொண்டால் மூவர் என்போர் துறந்தார், துவ்வாதவர், இறந்தார் ஆகிய மூவர் என்பது தெளிவுபடும்.

**அடைமொழி**

'இயல்புடைய' என்பது, மூவர்க்கு என்பதற்கு அடைமொழியாக நிற்கிறது.

இதைத் தொடர்ந்து ஏழாவது குறட்பாவில், 'இயல்பினான்' என்பது இல்வாழ்வான் என்பதற்கு அடைமொழியாக நிற்கிறது.

இல்வாழ்வானுக்குக் கூறப்படும் இயல்பு என்பதன் பொருள் என்ன ?

'இயல்புடைய' என்றும் 'இயல்பினான்' என்றும் கூறப்பட்ட அடைமொழிகள்தாம் 'மூவரை' அடையாளங் காட்டுவனவாகும்.

இயல்பு என்பது இயற்கையாகவே ஒருவருக்கு இருக்க வேண்டிய தன்மைகள், பண்புகள்.

இல்வாழ்வானுக்குரிய இயல்புகளாவன இல்லற நெறிகாத்தல், கடமையாற்றல், அறம் பேணுதல், ஊக்கம் உழைப்புகள், பொருளீட்டுதல், விருந்தோம்பல், இல்லார்க்கும் ஏழைக்கும் ஈதல், சுற்றந்தழுவுதல் முதலியன.

இவ்வடிப்படையில் துறந்தார், துவ்வாதவர், இறந்தார் என்போரைக் காண வேண்டும்.

### துறந்தார்க்குத் துணை

மேற்கூறியவாறு இல்வாழ்க்கைக்குரிய இயல்புகளுடன் வாழ்ந்தவன் அறம்பேணுதல், இல்லார்க்கு ஈதல், விருந்தோம்பல் மற்றும் பொது நலத்திற்காகப் பொருள் அளித்தல் முதலியவற்றால் தன் செல்வத்தைத் (துறந்து) இழந்து வாழ்க்கையில் துன்பப்படுபவன் வாழ்வதற்குத் துணைநின்று உதவுதல். இதுதான் துறந்தார்க்குத் துணையாக நிற்றல்.

### துவ்வாதவர்க்குத் துணை

வறுமையில் உழல்வோர் வாழ்வதற்கு உதவித் துணை நிற்றல்.

### இறந்தார்க்குத் துணை

முன் கூறியவாறு எல்லாவற்றையும் இழந்த நிலையிலுள்ளவன் எவ்வகையிலும் தான் வாழ்வதற்குரிய உதவியும், துணையும் பெறுவதற்கு ஏதுவில்லாத நிலையில் பிறரிடம் இரந்து (பிச்சை) வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான். எந்த ஆதரவும் இல்லாததால் ஊர் ஊர்தோறும் இரந்து வாழும் நிலையில் எவ்விடத்தேனும் ஓரிடத்தில் இறந்தானாயின் அவனுக்கு செய்ய வேண்டிய ஈமக்கடன் செய்வார் யாருமின்றி அநாதையாகக் கிடப்பான்.

அவ்வாறு அநாதையாக இறந்து கிடப்பவனுக்கு ஈமக்கடன் முதலியன செய்வதற்குத் துணை நிற்றல். அதாவது, துறந்தார், துவ்வாதவர், இறந்தார் ஆகிய மூவர். எனவே மூவர் என்பதற்கு இத்தகைய மூவர் எனக் கொள்வதே மானுட வாழ்வியலுக்கியைந்த பொருளாகும்.

### பொருந்தாக்கூற்று

மூவர் என்றது பிரமசரியம், வானப்பிரஸ்தம், சன்னியாசம், என்றால் இந்த ஆரிய வகை தமிழருக்கில்லை. எனவே இக்கூற்று பொருந்தாது. பெற்றோர் முதலியோர்க்குத் துணையிருந்து உதவுவது ஒவ்வொருவருக்கும் பிறப்பொடுவந்த கடமையல்லவா! இதிலென்ன துணையாக நின்று உதவுதல் என்ற தனிச்சிறப்பு இருக்கின்றது. இக்கருத்தும் பொருந்தாது.

# "குடும்ப விளக்கு, குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும்" – வேற்றுமைப் பண்புகள்

முனைவர் இ.கி.இராமசாமி
தமிழ்ப்பேராசிரியர், மதுரை

## அறிமுகம்

குடும்ப விளக்குக் காவியத்தில் பாரதிதாசன் பெண்ணுக்குரிய கடமைகளை மிகைப்படுத்திப் பெண்ணை அடிமை போலச் சித்தரித்துவிட்டார் என்பது திறனாளிகள் சிலரின் கருத்து. அவர்கள் தங்கள் கருத்துக்கு அரணாகக் குடும்ப விளக்கு முதற்பகுதியாகிய ஒரு நாள் நிகழ்ச்சியினைக் காட்டுவர். அதனை ஊன்றிப் பார்த்தால், வேலைக்காரியை நம்பியிருக்காமல் குடும்பத்தலைவி பணிகளைச் செய்து கொள்ளுதல் ஏற்புடையது என்ற உண்மை விளங்கும். 'சேவகராலே பட்ட சிரமம் மிகவுண்டு' என்ற அவருடைய ஆசான் பாரதி அனுபவத்தின் வெளிப்பாடும் விளங்கும். வசதி வாய்ப்புடைய குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் வேலையாட்களை வைத்துக் கொண்டு இருத்தல் கூடாது என்பதை அறிவுறுத்திப் பாடிய பகுதி என்பதை நினைவில் கொள்ள வேண்டும். உடலுழைப்பு இன்மையால் வரும் உடல்நலக்கேடு, உள்ளக்கேடு ஆகியவற்றை மறைமுகமாகப் பேசுவதாகவும் அப்பகுதியைக் கொள்ளலாம்.

## குடும்ப விளக்கில் ஆண்-பெண் சமஉரிமை

குடும்பவிளக்கு முதல் இரண்டு பகுதிகளை எழுதி முடித்த பாவேந்தர் இரண்டாண்டுகளுக்குப் பின்னர் மூன்றாம் பகுதியை எழுதினார் என்பதைக் குடும்ப விளக்கு மூன்றாம் பகுதியின் முன்னுரை காட்டுகின்றது. பெண் மீது அதிகப் பொறுப்பைச் சுமத்திவிட்டோமோ என்று கருதிய பாவேந்தர் இப்பகுதியில் ஆண்– பெண் சம உரிமையைத் தலைவி கூற்றாக விரித்துப் பேசியுள்ளார்.

வான ஊர்தி செலுத்துதல், கப்பல் ஓட்டுதல் போன்ற ஃசெயல்கள் ஆண், பெண் யாவர்க்கும் பொதுவானவை. சமைப்பதும் வீட்டுவேலையும் ஆடவர்க்கும் ஏற்புடைய பணிகளே. சமைப்பது தாழ்வான பணியல்ல. பெண்ணுக்குச் சொத்துரிமை வழங்கிட வேண்டும் என்பன போன்ற சமஉரிமைச் சிந்தனைகளும் மணவிலக்கு, மறுமணம் போன்ற சீர்திருத்தச் சிந்தனைகளும், யாரும் யாருக்கும் அடிமையாக இருக்க வேண்டியதில்லை என்ற உயரிய நோக்கில் சொல்லப் பெற்றுள்ளன.

*"காதல், உடையார்தம் வாழ்வில்*
*உளம் வேறு பட்டால்*
*மடவார் பிறனை*
*மணக்க விடவேண்டும்*
*ஆடவனும் வேறோர்*
*அணங்கை மணக்கலாம்".*

புரோகிதரை வைத்து மந்திரம் சொல்லிச் செய்யும் திருமணத்தால் பெண் அடிமையாக்கப்படுகிறாள்; போகப் பொருளாக்கப்படுகிறாள். எனவே புரோகிதரைத் தவிர்த்துப் பதிவு மணம் செய்து கொள்ளுதல் ஆண், பெண் கடனாகும் என்ற கருத்திலும் சமன்மை வலியுறுத்தப்பெறுகின்றது.

*"பார்ப்பானைக் கொண்ட*
*அடிமை மணமென்றும்*
*சொல்லும் அனைத்தும்*
*கழுந்து பதிவுமணம்*
*காணல் கடனாகும்".*

'கட்டாயம் பெண்கல்வி' என்று வலியுறுத்தி வந்த பாரதிதாசன் அதன் மதிப்பினையும் பயன்பாட்டையும் அழகுறப் பாடியுள்ளார். உலகினைப் பேணவும், கல்வியைப் பேணவும் பெண்ணுக்குக் கல்வி கட்டாயம் கற்றுத்தரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். எதிர்காலத் தலைமுறை வளமோடிருக்கவும் பெண்கள் நலமோடு இருக்கவும் பெண்களுக்குக் கல்வி தேவை என்கின்றார்.

*"பெண்கட்குக் கல்வி வேண்டும்*
*உலகினைப் பேணுதற்கே*
*பெண்கட்குக் கல்வி வேண்டும்*
*கல்வியைப் பேணுவதற்கே"*

குடும்பவிளக்கில் கவிஞரின் நேர் கூற்றாகவும் பெண்பாத்திரங்களின் கூற்றாகவும் ஆண்பாத்திரங்களின் கூற்றாகவும் நிகழ்ச்சி மூலமாகவும் ஆண்–பெண் சமஉரிமை பேசப்பட்டாலும் குடும்ப விளக்காக வரும் தங்கம் அம்மையார் ஓய்வின்றிச் செய்யும் பணிகள் அவளை ஓர் அடிமை போலச் சித்தரிக்கின்றன. அவை குடும்பத் தலைவிக்குப் பொறுப்புக்களா? கடமைகளா? சுமைகளா? என்ற ஐயங்கள் எழுதற்கு இடமளிக்கின்றன. அந்த ஐயங்களைத் துடைக்கத்தான் குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும் என்ற நாடகத்தை எழுதினார் என்று சொல்லுவது ஏற்புடைய கருத்தேயாகும். குடும்ப விளக்கு, குடும்பவிளக்கும் குண்டுக்கல்லும் ஆகிய இரண்டு படைப்புகளுக்கும் இடையே வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் அடிக்கருத்திலும் வேற்றுமைகள் பல உண்டு.

**வேற்றுமைப் பண்புகள்**

குடும்ப விளக்கு ஆசிரியம், வெண்பா, கலிப்பா, சிந்து போன்ற பாவகைகளைக் கொண்ட குறுங்காவியம், குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும் உரைநடை நாடகம், நடிப்பதற்கும் படிப்பதற்கும் உரிய ஓரங்க நாடகம்.

குடும்ப விளக்கில் காப்பிய வருணனைகளில் வரும் உவமைகளும் உருவகங்களும் நிறைந்துள்ளன.

*"அல்லிவிழி குளத்துநீரில் குதிக்கும் கெண்டைமீன்"* [5]
*"செங்காந்தள் நிகர் மங்கை விரல்"* [6]
*"விரிமலர்க்கை"* [7]
*"பறந்தனள் பச்சைப் பசுங்கிளி"* [8]
*"யாவர் தமிழிற் புரச்சுவை சேர்த்தான்"* [9]
*"முழுநிலா முகத்தாள்"* [10]

குண்டுக்கல் செறிவான நாடகமாதலால் வருணனை குறைவாக இருக்கின்றது. நேரடியாகக் கவிஞர் தம் கருத்தைச் சொல்ல நாடகத்தில் வாய்ப்பு இல்லை. எனவே, கண்ணப்பன் என்ற பாத்திரத்தின் மூலம் தம் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

குடும்ப விளக்கில் மணவழகர் தாமே பணிகளைச் செய்யும் பண்பாளர். சோம்பலுக்கு ஆட்படாதவர். உழைப்பால் உயர்ந்தவர். குண்டுக்கல் திருக்காழு எல்லா வேலைகளையும் பிறரைக் கொண்டே செய்விப்பார். மணவழகர் வணிகராகவும் தமிழ் உணர்வு கொண்டவராகவும் காட்டப்படுகின்றார். திருக்காழு பக்திப் பழமாகவும் பழமை விரும்பியாகவும் காட்டப்படுகின்றார்.

குடும்ப விளக்கில் சங்க இலக்கியம், திருக்குறள் ஆகியவற்றின் கருத்துக்கள் பல எடுத்துக்காட்டுக்களாக வரும்; குண்டுக்கல்லில் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமந்திரக் கருத்து மேற்கோளாக இடம் பெறுகிறது. சிறுத்தொண்ட பக்தன் கதை பகுத்தறிவு நோக்கில் எடுத்தாளப்பட்டுள்ளது. நாடகத்திற்கும் நாட்டு நடப்புக்கும் மிகுந்த வேறுபாடு இருப்பதைக் கணக்கனே சொல்வான்.[11] மேலும், பண்டைத் தமிழ்நூல் செய்திகள் சில மட்டுமே நாடகத்துள் இடம் பெறுகின்றன.

குடும்ப விளக்கில் நான்கு தலைமுறையினர் இடம் பெறுகின்றனர். குண்டுக்கல்லில் இரு தலைமுறையினர் மட்டுமே இடம் பெறுகின்றனர். குடும்ப விளக்கில் தங்கம் பொதுநலத்தை நினைவூட்டுவாள். பெண்ணே பெண்ணைப் போற்றுகின்ற இடமும் உண்டு. பெண்பிள்ளையைக் கண்ணில் வைத்துக் காப்பேன் என்பாள் மாமி.[12] குண்டுக் கல்லில் கண்ணப்பன் எடுத்துரைத்தபடியால் அவன் தந்தை ஆண்–பெண் சமத்துவத்தை ஒப்புக் கொள்கிறார். முன்னதில் பெண்ணின் பெருமையைப் பெண் பேசுகிறாள். பின்னதில் ஆண் பேசுகிறான்.

குடும்ப விளக்கில் வேடப்பன் வாணிபம் செய்யும் ஆற்றல் பெற்றவன். குண்டுக்கல்லில் கண்ணப்பன் தமிழ்ப்புலவர் பட்டம் பெற்றவன்; ஆண், பெண் சமத்துவத்தில் நாட்டமுடையவன். கண்ணப்பன், வேடப்பன் இருவரும் அன்பும் அறிவும் செயல்திறனும் மிக்கவர்கள். இல்லத்தாருக்கு உரிய அறப்பண்புகளை உணர்த்துவதில் இரு படைப்புகளுக்கும் இருவேறு கோணங்கள் இருக்கின்றன.

குண்டுக்கல்லில் சிறுத்தொண்ட பக்தன் கதை நாடகத்துள் நாடகமாகச் சொல்லப்படுகின்றது. குடும்ப விளக்கில் கிளைக்கதைகள் எதுவும் இல்லை. திருக்குறளில் கோயில் பற்றிய செய்தி இருந்தால் காட்டுங்கள் என்று கேட்கின்றாள் அமிழ்து. திருக்குறளில் கோயில் இல்லை என்று அவளுடைய தந்தை விடை கூறுகின்றார்.[13] இந்த அளவில் குடும்பவிளக்கில் பகுத்தறிவுச் சிந்தனை தென்படுகின்றது. ஆனால் குண்டுக்கல்லில் இன்னும் ஆழமான பகுத்தறிவுச் சிந்தனைகளைக் காண முடிகின்றது படையல், இறந்து போனவர்களுக்கு ஒருபோதும் போய்ச் சேருவதில்லை. அதனால் திராவிடனுக்கும் சிரார்த்தத்துக்கும் தொடர்பில்லை. ஒருத்தன் வந்து பிள்ளையை அறுத்துக்கொடு என்று கேட்டால் பெத்தவள் தொடப்பத்தை எடுக்கமாட்டாளா?[14] நாலுசாதி பெரும்பிரிவும், நாலாயிரம் சாதி உட்பிரிவும் கூறும் பிறநூல்கள்; பன்றிக்கறி கேட்கும் பெரியாண்டான் முதல் மீன்காவடி விரும்பும் வேலவன் வரைக்குமுள்ள எண்ணற்ற கடவுள்களைக் காட்டிவைத்துக் காசைச் சுரண்டும். ஆனால் தமிழ் நூல்கள் மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும் என்று கூறும்."[15]

'புகழ் எனின் உயிருங்கொடுப்பர்; பழி எனின் உலகு உடன்வரப்பெறினும் கொள்ளலர்' என்ற புறநானூற்றுக் கருத்தை உள்வாங்கி, 'தலை போவதாயினும் தகாத செயல் செய்யக்கூடாது' என்ற அறிவுரை குண்டுக்கல்லில் காணப்படுகின்றது.

*"தென்னாட்டுச் சேரசோழ பாண்டியரில்*
*இங்கான் ஒருவனோ என்ன நின்றான்"*[16]

எனவும்,

*"ஆண்டநாள் ஆண்டு, மாண்ட செந்தமிழ்ப்*
*பாண்டி மன்னன் மீண்டது போல"*[17]

எனவும் மூவேந்தர்களை, குறிப்பாகப் பாண்டியரைப் பேசுகின்றது குடும்பவிளக்கு.

பல்நூறு மைல்களுக்கு அப்பால் இருந்து தமிழரைப் பழித்த கனகவிசயர்களைத் தண்டித்ததாகப் படித்த நீங்கள் அண்டையில் தமிழையும் தமிழர்களையும் இகழ்கின்றவர்களைப் பார்த்துக் கைகளைக் கட்டி கொண்டிருக்கலாமா?[18] என்ற வினா சிந்திக்க வைக்கின்றது.

குடும்ப விளக்கில் பொதுநலன் குறித்த வாதமும் குண்டுக்கல்லில் கடமை, உரிமை குறித்த வாதங்களும் உண்டு. குறிப்பாக, ஆண்பிள்ளைகள் சோறுவடிக்கவும், கடைக்குச் சென்று உணவு எடுத்து வரவும் தயங்கக்கூடாது என்ற கருத்து குண்டுக்கல்லில் இடம் பெறுகின்றது.

*"அதிகாலை தொடங்கி இரவு மட்டும்*
*அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்பதல்லால்*
*இதுவரைக்கும் பொதுநலத்துக் கென்ன செய்தோம்"*[19]

என்று கேட்ட தலைவிக்கு,

*"பெரும்படியாய்ச் செய்ததுண்டு; படிக் கணக்கைப்*
*பேசிவிட்டாய் கண்டபடி"*[20]

என்று விடை கூறுகின்ற தலைவன் குடும்ப விளக்கில் இருக்கிறான்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு தலைவன் உண்டு; ஒரு தலைவி உண்டு. எனவே குடும்பத் தலைவர் இருவர். அதிகாரம் என்பது

இருவருக்கும் பொது. தலைவனுக்கு எவ்வளவோ, அவ்வளவு அதிகாரம் தலைவிக்கும் உண்டு"[21] என்று மனந் திருந்திச் சொல்லுகின்றார் திருக்காமு.

குடும்ப விளக்கில் அரசியல் வாடை இல்லை. ஆனால் குண்டுக்கல்லில் அரசியல் வாடை உண்டு. "முன்பெல்லாம் தமிழ்நாட்டில் தலைமையுடையவன் தலைவன் என்று இருந்தது. இப்போதெல்லாம் தலைகொழுத்தவன் தலைவன் என்று ஆக்கப்பட்டு விட்டது."[22] முன்பெல்லாம் தலைமையுடையவள் தலைவி இப்போதெல்லாம் இட்ட வேலைகளைத் தலையில் சுமப்பவள் தலைவி என்பது போன்ற நையாண்டிப் பேச்சுக்கள் குண்டுக்கல்லில் உண்டு.

**முடிவு :**

குடும்ப விளக்கு, பெண்ணைப் பற்றிய பழைய மதிப்பீடுகளின் பதிவாகவே விளங்குகின்றது என்ற கருத்தினை மாற்றவே பாரதிதாசன் குண்டுக்கல் நாடகத்தை இயற்றியுள்ளார் என்ற உண்மை ஒப்பமுடிந்ததாகும். பாரதிதாசன் என்ற கவிஞருக்குள் ஏற்பட்ட படிநிலை வளர்ச்சியாக இதனைக் கொள்ளலாம். இரண்டு படைப்புக்களாலும் பாரதிதாசனுக்குப் பெருமை கூடியிருக்கிறது. அவருடைய இலக்கியப் புனைதிறன் வளர்ந்திருக்கிறது என்று கொள்ளுதலே பொருத்தமாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. பாரதிதாசன், குடும்ப விளக்கு (முதல் இரண்டு தொகுதிகள்) பாரிநிலையம், சென்னை. (1972), ப.70.
2. மேலது, ப.64–65
3. மேலது. ப.64
4. மேலது. ப.69
5. மேலது. ப.5
6. மேலது.

7. மேலது. ப.6

8. மேலது.

9. மேலது.

10. மேலது.

11. பாரதிதாசன், குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும், தலைமலைகண்ட தேவர், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1978, பக்.85–89.

12. பாரதிதாசன், குடும்ப விளக்கு (3,4,5 ஆம் தொகுதிகள்), ப.62

13. மேலது. ப. 89.

14. பாரதிதாசன், குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும், ப. 88.

15. மேலது. பக்.96–97.

16. பாரதிதாசன், குடும்ப விளக்கு (3,4,5 ஆம் தொகுதிகள்), ப.39

17. பாரதிதாசன், குடும்பவிளக்கு (முதல் இரண்டு தொகுதிகள்) ப.9

18. பாரதிதாசன், குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும், ப. 98

19. பாரதிதாசன், குடும்பவிளக்க (முதல் இரண்டு தொகுதிகள்), ப.30.

20. மேலது, ப.31.

21. பாரதிதாசன் குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும், ப.103.

22. மேலது, ப.104.

குறிப்பு : குடும்பவிளக்கும் குண்டுக்கல்லும் நாடகத்தைக் கட்டுரையுள் குண்டுக்கல் என்று சுருக்கிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாவேந்தர் போற்றும் திருக்குறள்

திருக்குறள் ஞாயிறு முனைவர் பா.வளன் அரசு
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், தூய யோவான் கல்லூரி,
பாளையங்கோட்டை – 627 002.

## 1. முன்னுரை

திருவள்ளுவர் அருளிய திருக்குறள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பாவலர் பெருமக்கள் பலராலும் போற்றிப் பாராட்டப்பெறும் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்த வாழ்வியல் இலக்கியமாகும். இருபதாம் நூற்றாண்டில் பாரதிதாசன் என்று பாட்டுக்கொரு புலவர் சுப்பிரமணிய பாரதியாராலும், புரட்சிக்கவிஞர் என்று பேரறிஞர் அண்ணாவாலும், பாவேந்தர் என்று தென்மொழி இதழாசிரியர் பாலவரேறு பெருஞ்சித்திரனாராலும் போற்றிப் புகழப்பட்டவர் புதுவைப் பாவலர் கனக. சுப்புரத்தினம். பாவேந்தர் பாரதிதாசன் திருக்குறளின் சிறப்பை நான்கு நிலைகளில் பாடலாகப் புனைந்துள்ளார்; திருக்குறளுக்கு உரையும் வரைந்துள்ளார். ஆங்காங்கே தம் எழுத்தோவியங்களில் திருக்குறள் சொற்களையும் தொடர்களையும் கருத்து மணிகளையும் எடுத்துப் போற்றி மகிழ்ந்துள்ளார்.

## 2. பாவேந்தரும் திருவள்ளுவரும்

செந்தமிழே உயிரே நறுந்தேனே செயலினை மூச்சினை உனக்களித்தேனே[1] என்று தமிழ்மொழியின் அருமையினையும் தமது குறிக்கோளினையும் எடுத்தியம்பிய பாவேந்தர்,

*"மொழி யென்றால் உயிரின் நரம்பு – நான்*
*முத்தமிழ் மொழியோ தமிழர் வரம்பு*
*மறையால் கன்செய் யாகும் வரம்பு – நீன்*
*வாழ்நாள் எல்லாம் வைத்துத் தமிழை ஓம்பு"*[2]

என்று தாய்மொழியாம் தமிழ் மீது ஆர்வத்தை ஊட்டுகிறார். திருவள்ளுவர் தமிழ் என்றோ, தமிழினம் என்றோ, தமிழ் நாடு என்றோ கூறாமல் என்றும் நின்று நிலவும் எழுச்சி ஏடாகத் திருக்குறளைத்

தந்துள்ளார். பாரதியார் கூறுவது போன்று, வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு[3] என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

### 3. பாவேந்தர் பாடிய நான்கு பாடல்கள்

வள்ளுவர் வழங்கிய முத்துக்கள்[4] எனவும் இசை பெறு திருக்குறள்[5] எனவும் முழங்கும் குறள்[6] எனவும், படி படி படி[7] எனவும் நான்கு நிலைகளில் பாவேந்தர் பாரதிதாசன் திருவள்ளுவர் அருளிய திருக்குறளைப் பாடிப் பரவியுள்ளார். காலந்தோறும் ஞாலம் புகழும் திருக்குறளைப் பாவேந்தரும் பல்வேறு நிலைகளில் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

### 4. வள்ளுவர் வழங்கிய முத்துக்கள்

கலித்துறை விருத்தப்பாக்கள் ஐந்தும் வள்ளுவர் வழங்கிய முத்துக்கள் என்னும் தலைப்பில் அமைந்துள்ளன. முதற்பாடல் திருக்குறளின் கட்டமைப்பையும் வையகப் புகழையும் பறைசாற்றுகிறது.

*"தெள்ளு தமிழ்க்கடல் சின்னஞ் சிறிய ஈரடிகள்*
*அள்ளு தொறுஞ்சுவை உள்ளுந்தொறும் உணர்வாகும் வண்ணம்*
*கொள்ளும் அறம்பொருள் இன்பம் அனைத்தும்ம கொடுக்குந்திரு*
*வள்ளுவனைப் பெற்ற தாற்பெற்ற தேபுகழ் வையகமே"*

இரண்டாவது பாவில் திருக்குறளைப் பொதுமறை என்றும் முப்பாலாகிய திருக்குறளுக்கு எந்த நூலும் இணையாகாது என்றும் தெளிவுறுத்துகிறார்.

*"வெல்லாத இல்லை திருவள்ளு வன்வாய் விளைந்தவற்றுள்*
*பொல்லாத தில்லை புரைதீர்ந்த வாழ்விளிலே அழைத்துச்*
*செல்லாத தில்லை பொதுமறை யான திருக்குறளில்*
*இல்லாத தில்லை இணையில்லை முப்பாலுக் கிந்நிலத்தே"*

மூன்றாவது பாவில் திருவள்ளுவரின் சொந்தச் சிந்தனையில் தோன்றியவை ஆயிரத்து முந்நூற்று முப்பது முத்துக்களாக ஒளியுடன் மிளிர்கின்றன என்கிறார்.

*“தொன்னூற் படியில்லை திராவிடர் தூயகலை ஒழுக்கம்
என்னூற்படியிற் பெரும்படி இல்லை. பிழைபடியா
அந்நூற்படிதிரு வள்ளுவன் தந்தனன் ஆயிரத்து
முந்நூற்று முப்பதும் முத்தாக மூன்று மடியனந்தே”*

நான்காவது பா, கரும்புச்சாறு போன்று திருக்குறள் திகழ்வதாகத் தெரிவிக்கிறது.

*“கன்னல் இதுவெனக் காட்டியே மக்கள் கழித்துணுமோர்
இன்னல் தராது பருகுக சாறென ஈவதுபோல
பின்னல் அகற்றிப் பிழைதீர் நெறிஇது பேணீரென்றே
பன்னல் உடையது வள்ளுவன் முப்பாற் பனுவலொன்றே”*

ஐந்தாவது பா, சமத்துவ வழிகாட்டியாக விளங்கும் திருக்குறள் தித்திக்கும் முப்பழமாய் அமைந்துள்ளது என்கிறது.

*“வித்திப்பிழைக்கும் உழவனும் வேந்தனும் நாடனைத்தும்
ஒத்துப் பிழைக்க வழிகாட்டி வள்ளுவன் ஓதியநூல்
எத்துப் பழுத்தவர் ஏமாற்றும் ஆரியர் நான்மறைபோல்
அத்திப்பழமன்று; தித்திக்கும் முப்பழம் ஆம்படிக்கே”*

### 5. இசைபெறு திருக்குறள்

திருவள்ளுவரின் திருக்குறளைக் கசடறக் கற்கத் தூண்டும் பாவேந்தர் பாரதிதாசன் புகழ்பெற்றுத் தமிழர் இனிது வாழ விரும்புகிறார்; வாழ்த்துகிறார். நல்கூர் வேள்வியாரின் பாராட்டு மொழியினை எடுத்துக்காட்டி, திருக்குறளும் பகவத்கீதையும் இருவேறு மொழிகளில் இருவேறு பண்பாடுகளையும் கொள்கைகளையும் பறைசாற்றுகின்றன என்பர். ஆரூர்க் கபிலரின் எண்ணூலாம் சாங்கியத்தின் அடிப்படையில் திருக்குறள் திகழ்கிறது எனப் புகழ்வர். சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவர் பற்றிக் கல்லாடர் சொல்லை எடுத்தோதி, திருக்குறளுக்கு எம்மதச் சார்புமில்லை என்பர். பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுந்த “பரிமேலழகர் உரையோ வள்ளுவர் திருவுள்ளத்தின் திரையே ஆனது” என்பதை நிறுவ முனையும் பாவேந்தர், குடிமைக்கும் பழங்குடிக்கும் பரிமேலழகர் தந்துள்ள விளக்கம் பொருந்தாதவை என்று தெளிவுறுத்தியுள்ளார்.

## 6. முழங்கும் குறள்

இசைப் பாவடியில் திருக்குறளின் அருமை பெருமைகளை எடுத்தியம்பும் பாவேந்தர் **முழங்கிடுகின்றதே அறம்** எனத் தொடங்குகிறார். நான்கு குறட்பாக்களுக்கு விளக்கம் வழங்கும் பாங்கு பாராட்டத்தக்கதாகும். இன வேற்றுமையால் சிக்கலுக்கு ஆளாகி நிற்கும் இவ்வுலகில், திருக்குறள் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று ஒற்றுமை உணர்வை உருவாக்குகிறது. ஆம். உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன் என்னும் குறட்பா முதலாக நான்கு பாக்களைக் கொண்டு விளக்கம் வழங்குகிறார் பாவேந்தர். மக்களை ஒருங்கிணைக்கும் அடித்தளம் வாய்மை ஆகும். மாண்பிலா ஆட்சியாளரை நீக்கவும் தாய்மொழியாம் தமிழை மீட்டுக் காக்கவும் திருவள்ளுவர் அருளிய திருக்குறள் பெருந்துணை புரியும்; எண்ணிய அனைத்தையும் நினைத்தவாறே நிறைவேற்ற வேண்டுமானால் உள்ளத்தில் கொள்கைப்பிடிப்பும் உறுதிப்பாடும் இன்றியமையாதவை. எனவே தான் திருஞானசம்பந்தர் ஏழாம் நூற்றாண்டில் தேவாரம் பாடும்போது மண்ணினில் நல்ல வண்ணம் வாழலாம் என்றார். ஒற்றுமையால் அச்சம் அகலும்; ஊருக்கு உழைத்திடும் ஆர்வமும் வீரமும் தோன்றும். நினைத்ததை முடிப்பவன் என்று ஒவ்வொருவரும் திகழ்வர். அஞ்சுவது அஞ்சாமை பேதைமை என்று மொழிந்த திருவள்ளுவர், அஞ்சத் தக்கவற்றுக்கு அஞ்ச வேண்டும்; அஞ்சத்தகாதவற்றை எதிர்த்துப் போரிட வேண்டும். நீதிநெறி நிலைநாட்டக் கிளர்ந்தெழ வேண்டும் என்றும் தெளிவுறுத்தியதையும் எடுத்துக் காட்டியுள்ளார் பாரதிதாசன். இசைவடிவில் திருக்குறளை எடுத்தியம்பினால் எல்லோரும் செவிமடுப்பதோடு செயலாற்றவும் அணிவகுப்பர் என்கிறார் பாவேந்தர்.

## 7. திருக்குறளைப் படிப்போம் பரப்புவோம்

திருக்குறள் காட்டிய நன்னெறி செந்தமிழ் நாட்டார் பெற்ற தொல் நெறியாகும். எல்லோரும் இன்புற்றிருக்க எண்ணி வாழ்பவரே தமிழர் ஆவர். தமிழ்த்தாய் திருக்குறள் நூலுடன் சிறப்புமிக்க சங்க

ஏடுகளையும் விருப்பத்தோடு விளையச் செய்தாள் என்பர். பாரதியாரின் ஞானரதம் என்னும் உரைநடை நூல் உபநிடத விளக்க ஏடாகும். பாவேந்தரின் நூலைப்படி என்னும் பாடல் திருக்குறள் மாண்பினை எடுத்து முழங்கும் விளக்கமாகும். சங்கத்தமிழ் நூலைப் படிக்கத் தூண்டும் பாவேந்தர், காலை முதல் மாலை வரை பொருள் உணர்ந்து சங்க ஏடுகளைக் கற்றிட வேண்டுகிறார். சங்க இலக்கியம் ஒரு வாழைத் தோட்டம் என்பார் முனைவர் மு. வரதராசன். சங்கப்பா தனக்கு உவமையில்லாத சமுதாயப்பா என்று பாராட்டி மகிழ்ந்தார் பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ. நானூற்று எழுபத்து மூன்று புலவர் பெருமக்கள் நல்கிய இரண்டாயிரத்து முந்நூற்று எண்பத்தொரு பாக்கள் சங்க இலக்கியம் ஆகும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய இருபது நூல்களின் கருத்துப்பெட்டகமே சங்கச் சான்றோரின் எண்ணக் கருவூலம் என்பர். கற்பவை கற்கும்படி வள்ளுவர் சொன்னபடி கற்கத்தான் வேண்டும் என்று எடுத்துரைக்கும் பாவேந்தர், அப்படிக் கல்லாதவர் எப்படி வாழவியலும் என்று வினவுகிறார். அறம் பொருள் இன்பம் ஆகிய முப்பாலும் முறையாகக் கற்றால் தமிழ் நான்மறை தோன்றும் என்பார். அகமும் புறமும் என்று பழந்தமிழர் பகுத்துக் கூறிய அனைத்தும் கற்றால் படிப்படியாய்ப் புலமை வரும் என்று விளம்புகிறார். மேலும்,

*"சாதி என்னும் தாழ்ந்தபடி நமக்கெல்லாம் தள்ளுபடி*
*சேதி அப்படித்தெரிந்தபடி, தீமை வந்திடுமே மறுபடி"*

என்று தெளிவுறுத்தியுள்ளார்.

**8. நிறைவுரை**

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் ஒளி விளக்கு திருக்குறள். வாழ வழிவகுத்த வள்ளுவனார் தமிழ் மறையை நல்லமுறையில் நவின்றதால் நாட்டுமக்கள் நலம்பெறவும் வழிவகுத்தார். இனிய சொற்களோடு முகம் மலர்ந்து ஏழை

எளியோர்க்கு ஈந்து மகிழ வேண்டும் என்று அறிவுறுத்திய திருவள்ளுவர் தாம் எழுதிய திருக்குறளால் வையகம் வாழ வழிவகுத்தார். திருக்குறளை இந்தியத் தேசிய இலக்கியமாக விரைவில் அறிவிக்க வேண்டும் என்று அறிஞர் பெருமக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளனர். தமிழக அரசு சட்டப் பேரவையில் ஒருமித்த குரலில் திருக்குறளைத் தேசிய இலக்கியமாக ஏற்கவும் போற்றி மகிழவும் பாரத மணித் திருநாட்டு ஆட்சியாளர் முன்வர வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது வரலாற்றுச் சாதனை ஆகும். இந்திய அரசு திருக்குறளைத் தேசிய இலக்கியமாக ஏற்றுப் போற்றுவதன் வாயிலாகச் சமய நல்லிணக்கம் செழித்துக் கொழிக்கும். உலக அரங்கில் திருக்குறள் பொதுமறையாகப் போற்றப்படும். செவ்வியல் மொழியாகச் சிறப்புடன் விளங்கும் தமிழ் மொழியின் எழிலார்ந்த இலக்கிய ஏடாகிய திருக்குறள் ஆற்றலும் ஏற்றமும் மிக்கதாக அறிவிக்கப்படும் போது நாட்டு முன்னேற்றமும் மானிட மறுமலர்ச்சியும் பூத்துக் குலுங்கும்.

**மேற்கோள் விளக்கம்**


1. பாரதிதாசன் இசையமுது முதல் தொகுதி, ப.32.
2. பாரதிதாசன் தமிழுக்கு அமுதென்று பேர், ப.115.
3. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.72.
4. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி, பக்.154–155.
5. மேலது, பக்.156–158.
6. பாரதிதாசன், இசையமுது இரண்டாந்தொகுதி, பக்.24–25.
7. பாரதிதாசன், ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது, பக்.34–35.

# ஒரு துறையும் பல்லோர் பாடலும்

–முனைவர் கி. இராசா
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

சங்க இலக்கியங்கள் திணைக்கோட்பாட்டை மையமாகக் கொண்டவை. திணையை மையமாக வைத்தே துறைகளின்வழி பாடற்கருத்துக்கள் புனையப்படும். எனவே திணைக் கருத்து என்பது மையமாகவும் (Central), பிறகருத்துக்கள், திணைக்கருத்தினை விளக்கவும் அணிபெறச் செய்யவும் வரும் வெளிப்பரப்பாகவும் (Peripheral) அமைவன. இலக்கியம் படைக்கும் புலவர்கள் பாடலின் மையக் கருத்தான திணைக்கருத்தை ஊன்றியுரைப்பதில் ஒரு நோக்குடையவர்களாகக் காணப்படுகின்றனர். அதே வேளையில் பாடலின் வெளிப்பரப்பான சார்புக் கருத்துக்களைப் புனைவதில் தத்தம் தனித்திறம் புலப்படுமாறு வேறுபட்ட நோக்குடையவர்களாகத் திகழ்கின்றனர். புலவர்களின் இத்திறத்தைப் புலப்படுத்துவதற்குக் காஞ்சித் திணையின் மகட்பாற் காஞ்சித் துறையிலமைந்த பாடல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

காஞ்சியெனும் தொல்காப்பியப் புறத்திணை நிலையாமையைக் குறிப்பிடுகின்றதென்பது பொதுவான கருத்தாகும். நில்லாவுலகம் புல்லிய நெறித்தே எனும் காஞ்சித் திணைச் சூத்திரத்தின் ஈற்றடி இதனை உணர்த்தும். இந்த நிலையாமைக் கருத்து எதனடிப்படையில் விளக்கம் பெறுகின்றது என்பதை அறிவதற்குத் தொல்காப்பியக் காஞ்சித் திணையின் துறைகள் உதவுகின்றன. அங்கு விளக்கப் பெற்ற பெரும்பாலான காஞ்சித்துறைகள் போர்க்களத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன.

இன்னொரு குறிப்பு யாதெனில் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை ஆகிய ஐந்து திணைகளும் போர் நிலைகளுக்கேற்ப ஒவ்வொரு நிலத்தைப் பெற்றிருக்க காஞ்சித்திணை ஐந்து

நிலத்திற்கும் பொதுவானதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்றாற்போல் போர்க்களத்தில் ஓரிரு இழப்புக் குறிப்புக்களைத் தவிர வேறெதையும் தொல்காப்பியர் பிற போர்த் திணைகளில் விரிவாகச் சொல்லவில்லை. வெட்சியில் வாள் வாய்த்துக் கவிழ்தலும், உழிஞையில் தொகைநிலையும், தும்பையில் ஒருவரும் ஒழியாத் தொகைநிலையும் தொல்காப்பியர் பிற புறத்திணைகளில் குறிப்பின் சுட்டியுள்ள இழப்புத்துறைகளாகும். மேலும் மகட்பாற் காஞ்சித் துறை, உழிஞைத் திணையின் போர்முறையாகிய முற்றுகையின்போது நிகழும் இழப்பினைச் சுட்டும் நிலையாமைத் துறையாகக் கருதற்பாலதாகும். மகட்பாற் காஞ்சித் துறையிலமைந்த பாடல்களின் கூறுகளைப் பகுத்துப் பார்க்கும்போது இக்கூற்று மேலும் வலுப்பெறக் காணலாம்.

புறநானூற்றில் பத்தொன்பது பாடல்கள் (புற336–354) மகட்பாற் காஞ்சித் துறையில் அமைந்துள்ளன. இப்பாடல்களைப் பரணர் (6: 336, 341, 343, 348, 352, 354), கபிலர் (2: 334, 337), அடைநெடுங் கல்வியார் (3: 344, 345, 346), அரிசில் கிழார் (342), காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் (353), குன்றூர்கிழார் மகனார் (351), மதுரை ஓலைக்கடைக் கண் புகுந்தாரயத்தனார் (350), மதுரை படைமங்கமன்னியார் (351), மதுரை மருதனிள நாகனார் (349) ஆகியோர் பாடியுள்ளனர். இரு பாடல்களைப் (339, 340) பாடியோர் பெயர் தெரியவில்லை.

இப்பாடல்களில் ஊர்வளம், தலைவிநலம், முற்றுகைத் திறம், தந்தை–தமையர் மறம், தலைவியின் குடித்தரம், ஊரழிவிற்கு இரங்கும் அறம் ஆகியவை மையக்கருத்துகளாக எல்லாப் பாடல்களிலும் பாடப் பெற்றுள்ளன. இவற்றுள் இறுதியதாகிய ஊரழிவிற்கு இரங்கும் அறம் என்பதை மகட்பாற் காஞ்சியின் உயிர்ப் பொருளாகக் கருதலாம். ஊரின் நிலையாமையைப் பாடுதலால் இது காஞ்சித் திணையின் பாற்பட்டது போலும். எனவேதான் மகளின்

நிமித்தமாக ஊர் அழியப் போவதை நினைத்துப் பாடப்பட்ட பாடல்கள் எனப் பொருளாகுமாறு இது மகட்பாற்காஞ்சி எனப் பெயர் பெற்றதாகலாம்.

மகட்பாற்காஞ்சித் துறையிலமைந்த பாடல்களின் பாடுபொருட்கள் யாவும் அரணம் முந்தலும் காத்தலுமாகிய போரும், அப்போரின் விளைவாகிய ஊரழிவை எதிர்பார்த்து இரங்குதலுமாக அமைந்துள்ளன. ஊர் வளமாக தலைவியின் மருதநில வளம் பாடப்பெற்றுள்ளது. தலைவியினுடைய தந்தையின் மறச்சிறப்புப் போற்றப்பட்டுள்ளது. முற்றுகைச் சிறப்பு நற்றம் பெற்றுள்ளது.

அடைநெடுங்கல்வியார் பாடலில்,

> *"செந்நெல் உண்ட பைந்தோட்டு மஞ்ஞை*
> *செறிவளை மகளிர் ஓப்பலின் பறந்தெழுந்து*
> *துறைநணி மருதத்து இறுக்கும் ஊர்"* (344: 1–3)

என்று ஊர் வளம் சிறப்பிக்கப்படுகிறது.

> *"பைங்கால் கொக்கின் பகுவாய்ப் பிள்ளை*
> *மென்சேற்று அடைகரை மேய்ந்துஉண்டதற்பின்*
> *ஆரல்ஈன்ற ஐயவி முட்டை*
> *கூர்நல் இறவின் பிள்ளையொடு பெறூஉம்*
> *தண்பணை ...* (342: 7–11)

என்று ஊர் வளத்தை அரிசில்கிழார் விரித்துரைக்கிறார். இவ்வாறு அனைத்துப் பாடல்களிலும் ஊர்வளம் போற்றப்படுகிறது.

மகட்பாற் காஞ்சிப் பாடல்களில் தந்தை–தமையர் மறமும் அவர்தம் குடித்தரமும் பலபடப் பாராட்டப்படுகின்றன.

(எ.டு) *"கடவன கழிப்பு இவள்தந்தையும் செய்யான்"* (336:2)
*"வேந்துகுறை யுறவுங் கொளாஅன்"* (341:1)

"புரையோர் அல்லோர் வரையலன் இவள் என
தந்தையும் கொடாஅன்... .. (343:12–13)

"பொருநாது அமருவர் அல்லர் போருழந்து
அடுமுரன் முன்பின் தன்னையும் .... .." (350:7–8)

மகட்பாற்காஞ்சிப் பாடல்களின் மையக்கருத்துக்களுள் ஒன்றாகிய முற்றுகைத் திறம் அனைத்துப் பாடல்களிலும் விரிவாகப் பேசப்படுகிறது.

(எ.கு) "எழுவிட்டு அமைத்த திண்ணிலைக் கதவின்
அரைமண் இஞ்சி நாட்கொடி துடங்கும்
புலிக்கணத் தன்ன கெடுங்கண் சுற்றம்" (341:4–6)

"இல்தொறும் நெடுந்தேர் நிற்ப வயின்தொறும்
செந்நெல் யானை பிணிப்ப ... (348:4–6)

இவை போன்றே ஊரின் அழிவிற்கு இரங்கும் அறமும் மகட்பாற்காஞ்சித் துறையிலமைந்த எல்லாப் பாடல்களிலும் காணப்படுகின்றது. இதுவே இத்துறைப் பாடல்களின் உயிர்ப்பொருள் என முன்பு கண்டோம்.

(எ.கு) "என்னா வதுகொல் தானே
பன்னல் வேலிஇப் பணைநல் லூரே" (345:19–20)

"...... ...... கதுவாய் மூதூர்
யாங்கா வதுகொல் தானே" (350:2–3)

"என்ஆ வதுகொல் தானே
ஏமம்சால் சிறப்பின்இப் பணைநல் லூரே" (351:11–12)

மகட்பாற் காஞ்சிப் பாடல்களில் காணப்படும் இம் மையக் கருத்துக்கள் தவிர, குறிப்பிடத்தகுந்த இரு செய்திகள் இவற்றில் காணப்படுகின்றன. அவை வருமாறு:

முதுகுடிமகள் ஒருத்தியை வேந்தன் கண்டு, அவள்மீது விருப்புக் கொண்டு 'இவள் யார்?' என்று வினவ, அதற்குப் பாங்கன் அல்லது பாணன் பதிலிறுப்பதாக மூன்று பாடல்கள் அமைந்துள்ளன.

> *"ஓமோர் மகள்கொல் இவள்என விதுப்புற்று*
> *என்னொடு வினவும் வென்வேல் நெடுந்தகை"* (342:7–4)

> *"தருமமொடு இயல்வோன் சாயம் நோக்கித்*
> *தவிர்த்த தேரை விளர்த்த கண்ணை*
> *வினவல் ஆனா வெல்போர் அண்ணல்*
> *யார்மகள் என்போய் கூறக்கேள் இனி"* (353:4–7)

> *"…. ….. ….. இளையோள்*
> *மாமகள் ….. …… ……*
> *…. வினை வினவுதி கேள் இனி"* (340:3–5)

இவற்றுள் முதலிரு பாடல்களை முறையே அரிசில் கிழாரும், காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கிழாரும் பாடியுள்ளனர். மூன்றாம் பாடலைப் பாடிய புலவர் பெயர் தெரியவில்லை.

மறக்குடி மகளைக் கண்ணுற்றவேந்தன், அவளை மணப்பதற்கான முயற்சியையும் சில பாடல்கள் சுட்டுகின்றன. இதில் செல்வம் தந்து மணப்பது, கவர்ந்து வந்து மணப்பது ஆகிய இருவகை நிலைகள் பேசப்படுகின்றன.

வேந்தன் பெண் கேட்டு மறக்குடியினரை அணுகுகின்றான். அவளுக்கு ஈடாக செல்வம் (மணவிலை) தந்து பெண் கேட்கின்றான்: மறக்குடியினர் மறுக்கின்றனர். செல்வம் தந்து வேந்தன் அவளை மணக்கக் கருதியதும் அதற்கு அவள் வீட்டார் மறுத்ததும் பற்றிய செய்திகள் வருமாறு:

> *"உறந்தை அன்ன உரைசால் நன்கலம்*
> *கொடுப்பவும் கொளாஅன்"* (352:10–11)

கபிலர் பாடல்களில் பாரியும் அகுதையும் உவமைகள் வாயிலாகச் சிறப்பிக்கப்படுகின்றனர். அடைநெடுங் கல்வியார் பாடலில் (புறம்:346) இருவகை மணம் பேசப்படுகிறது. அரிசில்கிழார் பாடலிலும் (புறம்:342), காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் பாடலிலும் (புறம்:353) 'இவள் யார் என்று என்னை வினவுகின்றவேந்தனே, சொல்கிறேன் கேள்', என்று மகட்பாற்காஞ்சியின் வளர்நிலை வெளிப்படுகிறது. இதனோடு பிற்காலத்திய அனுராக பாலை, காதல் ஆகியவற்றுக்கு உள்ள தொடர்பு ஆராயத்தக்கது.

இவ்வாறு ஒருதுறைசார்ந்த பாடல்களை அருகருகே வைத்து ஆராய்ந்து பார்க்கும்போது பல புதிய செய்திகள் வெளிப்பட பெருவாய்ப்பு உள்ளது என்பதை இவ்வாய்வின் வழி அறியலாம். மேலும் திணைக்கருத்தான மையக்கருத்தைப் பல்வேறு துறைகளின் வழி புலப்படுத்துவதில் பொது நோக்குக் காணப்படுவதோடு, அம் மையப்பொருளைச் சிறப்பிப்பதற்காகச் சில சார்புக் கருத்துக்களையும் புலவர்கள் பெய்து பாடுகின்றனர் என்பதையும் அறிய முடிகிறது. பொதுக் கருத்தைக் காட்டிலும் சார்புக் கருத்திலேயே புலவர்களின் தனித்திறம் புலனாகிறது என்பது இதன்வழி பெறப்படும் உண்மையாகும்.

தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை–625001.**

தொலைபேசி : 0452-6575615

RNI Regd. No.: 5508/56 March 2009

## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ. எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : தனம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1.